

49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர்கள் இரா.ராஜேந்திரன், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர் பாபு ஆகியோர் அரசு துறை அரங்குகளில் சிறப்பாக செயலபட்ட அரசு துறை சார்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கி கவுரவித்தனர். உடன் மேயர் ஆர். பிரியா , துணை மேயர் மகேஷ்குமார் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அறிமுக ஆலோசனைக் கூட்டம் - சமூக வலைதளப் பயிற்சி!

### அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அறிமுக ஆலோசனை கூட்டம் மற்றும் சமூக வலைதளப் பயிற்சி இன்று (25.03.2025) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி அளவில் "எம்.கே.டி.மகால், ஸ்டாரன்ஸ் ரோடு, ஓட்டேரி எனும் முகவரியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய் தலைமையில், மாநில இளைஞரணி துணை செயலாளர் எஸ்.ஜோயல் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட/ பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### திருப்பரங்குன்றம் திருக்கோவிலுக்கு

# ரூ. 32 கோடியில் ரோப் கார் அமையவிருக்கின்றது!

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

**சென்னை, மார்ச் 25-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (24.03.2025) வினா விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.பூமிநாதன், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் இ.ராஜா, திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் வி.வி.ராஜன் செல்லப்பா, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் கே.கணபதி ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.**

**எம்.பூமிநாதன்:** மதுரை தெற்கு தொகுதியில் உள்ள மாரியம்மன் தெப்பக்குளத்தை புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் கோரிய மாரியம்மன் தெப்பக்குளத்தை திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு ரூ.39 லட்சம் செலவில் நடைபாதை சுற்றி கிரானைட் கற்களை அமைக்கின்ற பணி முடிவுற்றிருக்கின்றது. திருக்குளத்தின் மத்தியில் இருக்கின்ற நீராழி மண்டபத்தை ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க 21.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஆணையர் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டவுடன் இந்த மாத இறுதிக்குள்ளாக அந்த பணிகள் துவக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம்.பூமிநாதன்:** மாரியம்மன் தெப்பக்குளம் சாலையினை புனரமைத்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத்தொடரில் தெப்பக்குளம் ரோடு உடனடியாக செய்து தரப்படும் என்று அறிவித்ததற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டு, அதற்கும் மாநகராட்சிக்கு கோயில் HR&CE என்ஓசி கொடுக்க வேண்டும் என்று மாநகராட்சி நிர்வாகத்தில் கேட்கின்றார்கள். அதையும் உடனடியாக நீங்கள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தெப்பக்குளம் பகுதியில் உள்ள முக்தீஸ்வரர் கோயில் மிகவும் பழமையான கோயில், மீனாட்சி சுந்த ரேஸ்வரர் திருக்கோயில் உடைய உபயக்கோயிலாகும். முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது 2010 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடந்து 14 ஆண்டுகள் ஆகின்றன. எனவே அதற்கு குடமுழுக்கு நடத்தி தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவதாக அனுப்பானடியில் அமைந்துள்ள சோணையார் கோயில் புனரமைப்பு பணி நடைபெற்று வருகின்றன. அதை விரைவுபடுத்தி குட முழுக்கு நன்னீராட்டு நிகழ்ச்சி விரைவாக நடத்திட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

### சோணையார் கோயில் திருப்பணிகள்!

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** முக்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு நானே நேரடியாக ஆய்வுக்கு சென்றிருந்தேன். மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் அத்திருக்கோயில் இறைவன் மீது சூரிய ஒளி நேராக படுகின்ற ஒரு சிறப்பு வாய்ந்த தலமாக அமைந்துள்ளது . அந்த திருக்கோயிலின் திருப்பணிகள் விரைவில் துவக்கப்பட்டு இந்தாண்டு இறுதிக்குள் நடத்தப்படும். அவர் கூறிய மற்றொரு திருக்கோயிலான சோணையார் திருக்கோயிலுக்கு ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரும் ஆகஸ்ட் மாதத்திற்குள் குடமுழுக்கு நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம்.பூமிநாதன்:** இரு திருக்கோயில்களுக்கும் குடமுழுக்கு நடத்தி தரப்படும் என அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்களின் சட்டப் பேரவை தொகுதியில் மட்டும் இதுவரையில் பல திருக்கோயில்களுக்கு குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளன. மேலும், அவர் கோரிய திருக்குளங்கள் இரண்டும் இந்த ஆண்டு இறுதிக்குள் திருப்பணிகளும் மராமத்து பணிகளும் முடிவுறும். அதேபோல் அந்த தொகுதியில் 8 திருக்கோயில்கள் குடமுழுக்குக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் அல்லது ஜனவரிக்குள் முழுமையாக அவரது சட்டமன்ற தொகுதியில் ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு மேல் உள்ள திருக்கோயில் அனைத்தும் குடமுழுக்கு நடத்தி முடிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ.ராஜா:** சங்கரன்கோவில் சங்கரநாராயணன் கோமதி அம்மாள் திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்ட தெப்பம் ஆவுடை பொய்கை தெப்பம் மிகவும் சிதலமடைந்த நிலையில் உள்ளது. அதற்கு மதிப்பீடு கோரப்பட்ட நிலையிலும் இன்னும் நகராட்சிக்கு அந்த என்ஓசி வழங்காமல் நிலுவையில் இருப்பதை அமைச்சர் அவர்கள் உடனடியாக அதை சீரமைத்து தருவதற்கு பரிந்துரைக்கும் படி தாங்கள் வாயிலாக கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** கேளாமல் கொடுக்கின்ற அரசு, கேட்டதெல்லாம் தருகின்ற அரசு என்பதற்கு இது ஓர் உதாரணம். உறுப்பினர் அவர்கள் கூறிய என்ஓசி என்பது 08.03.2025 அன்று நகராட்சிக்கு திருக்கோயில் நிர்வாகம் வழங்கி இருக்கிறது என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நகராட்சியை அணுகி இந்த பணிகளை விரைவுப்படுத்தி முடிக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், சங்கரன்கோவிலை பொறுத்த அளவில் குடமுழுக்கு என்பது நம்முடைய வணிகவரித்துறை அமைச்சர் அவர்களால் நேரடி கட்டுப்பாட்டில் பல உபயதார்களை ஏற்படுத்தி தந்து, பல்வேறு தடைகள் ஏற்படுத்த முற்பட்டபோதும், பணிகள் நிறைவேறவில்லை என்று பல குற்றச்சாட்டுகளை பல நல்லவர்கள் எழுப்பிய போதும், அந்த தடைகள் எல்லாம் உடைத்தெறிந்து திராவிட மாடல் அரசு அனைவரும் மகிழ்ச்சியுறும் வகையில் அந்த திருக்கோயிலின் குடமுழுக்கை சிறப்பாக நிறைவேற்றி தந்த அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### முதல்வர் உத்தரவாதம்!

**வி.வி.ராஜன் செல்லப்பா:** மதுரை திருப்பரங்குன்றம் திருக்கோயிலின் பங்குனி தேரோட்டம் திருக்கல்யாணமும் நடந்து முடிந்திருக்கிற நல்ல நேரம் இது. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களிடம் இத்திருக்கோயிலின் கும்பாபிஷேகம் உரிய காலம் தாண்டி சென்று கொண்டிருக்கிறது என்பதையும், உரிய வகையிலே இந்த திரு க்கோயிலில் காசி விஸ்வநாதர் கோயிலுக்கு தாங்கள் அளித்து இருக்கிற ரோப்கார் வசதி உரிய நிதி ஒதுக்கப்படாததால் அதனுடைய திட்டமே செயல்படாமல் இருப்பதும், கிரிவலப் பாதை மேம்பாடு செய்ய அமையாமல் இருப்பதும் ஏனைய திருக்கோயில்களை போல திருச்செந்தூர், பழனியை போல் அறுபடை வீடுகளில் முதல் படைவீடாம் திருப்பரங்குன்றத்திற்கு சிறப்பு நிதி ஏதும் ஒதுக்காத காரணத்தையும், அறநிலையத்துறையின் சார்பாக ஒரு மகளிர் கல்லூரியை அமைக்க வேண்டியும் தாங்கள் உரிய பதிலை அளிக்க அன்போடு வேண்டுகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** இன்னார் இனியவர் என்று அல்ல, எல்லோருக்கும் எல்லாம் என்று இந்த அரசு உரிய பதிலை உரிய முறையில் அளிப்போம். ரோப்காரை பொறுத்தளவில் கடந்த ஆண்டு தமிழக முதல்வர் அவர்கள் திருப்பரங்குன்றத்துக்கும் திருநீர் மலைக்கும் ரோப்கார் அமைக்க கடந்தாண்டு ரூ.26 கோடியை அறிவித்திருந்தார். தற்போது டிஜிட்டல் சர்வே, ட்ரோன் சர்வே, ஜிஓ சர்வே என மூன்றும் முடிவுற்று திருப்பரங்குன்றம் திருக்கோயிலுக்கு மட்டும் ரோப்கார் அமைக்க ரூ.32 கோடி அதற்கு செலவாகும் என்று ரைட்ஸ் என்ற நிறுவனம் கருத்துரு அளித்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் கூடுதல் நிதியை இந்த ஆண்டு விடுவிப்பதாக உத்திரவாதம் அளித்திருக்கின்றார். நிச்சயம் இந்த ஆண்டு அதற்குண்டான தொகை வழங்கப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அந்த பணிகளை தொடங்கப்படும். அதேபோல் குடமுழுக்கை பற்றி சொன்னார். 2012ஆம் ஆண்டு தான் நிறைவுற்ற குடமுழுக்கு தற்போது இரண்டரை கோடி ரூபாய் செலவில் 16 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 14.07.2025 அன்று நடைபெறவுள்ள குடமுழுக்கில் நானும் அந்த மாவட்டத்தின் அமைச்சர் திரு.மூர்த்தியும் பங்கேற்க இருக்கின்றோம். சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும் வந்து கலந்து கொண்டு குடமுழுக்கை சிறப்பாக நடத்திக் காட்டுவோம் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கே. கணபதி :** சென்னை மாநகராட்சி மண்டலம் 11, வார்டு 153ல் அமைந்துள்ள போரூர், பாலமுருகன் திருக்கோயில் மிகவும் பழமை வாய்ந்தது. கோயிலின் கருவறையானது அந்த சாலையை விட மிகவும் பள்ளமான நிலையில் உள்ளது. எனவே கோயிலின் கருவறை உயர்த்தி புனரமைப்பு பணிகள் எல்லாம் முடிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படுமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வளசரவாக்கம், அகஸ்த்தீஸ்வரர், வேள்வீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற வேண்டும், திருக்குளம் சீரமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வைத்த கோரிக்கையை ஏற்று நான்கு முறை இதுவரை அந்த பகுதிக்கு ஆய்வுக்கு மேற்கொண்டுள்ளோம். மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழ் கடவுளான முருகருக்கு மட்டும் சுமார் 103 திருக்கோயில்களுக்கு இதுவரையில் குடமுழுக்கு நடத்திய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி என்பதை அவருக்கு நினைவு ப்படுத்தி, அவர் கூறிய அந்த திருக்கோயிலுடைய குடமுழுக்கு பணியை உடனடியாக இரண்டு மூன்று நாட்களில் ஆய்வு செய்து அதற்கு உண்டான ஆயத்த பணிகளை மேற்கொண்டு உடனடியாக திருப்பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி. கே.சேகர்பாபு கூறினார்.





எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, புரசைவாக்கம், கங்காதீஸ்வரர் கோவில் தெருவிலுள்ள கம்மவார் மஹாலில், சென்னை மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பினை வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ நடத்தி வைத்து, இவ்விழாவில் கலந்துகொண்ட 100 கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சீர்வரிசைப் பொருட்கள், ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு, புடவை, 1 லிட்டர் வெந்நீர் ஃபிளாஸ்க் ஆகியவற்றை வழங்கினார்.





இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, நேற்று (24.03.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக், தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டி பகுதியில்

# வெடி விபத்தில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 25-**

**விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், திருக்குணம் மதுரா கொசப்பாளையம் கிராமத்தில் பாறையை வெடி வைத்து தகர்த்தபோது சிதறிய கருங்கல் தலையில் விழுந்ததில் உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், திருக்குணம் மதுரா கொசப்பாளையம் கிராமத்தில் நடைபெற்ற வாய்க்கால் பராமரிப்புப் பணியின்போது வாய்க்கால் நடுவிலிருந்த பாறையை அகற்றும் பொருட்டு நேற்று (23.3.2025) மாலை அப்பாறையை வெடிவைத்து தகர்த்தபோது சிதறிய கருங்கல் எதிர்பாராதவிதமாக அருகிலிருந்த விவசாய நிலத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த திருமதி. முத்துலட்சுமி என்பவரின் மகள் செல்வி. காயத்திரி (வயது 10) என்பவரின் தலையின் மீது விழுந்ததில் பலத்த காயமடைந்த சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்தச் சம்பவத்தில் விபத்தில் உயிரிழந்த சிறுமி காயத்திரியின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரை!

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் புனித ரமலான் நோன்பு திறப்பு!

## செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிக்கை!

சென்னை, மார்ச். 25-

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் புனித ரமலான் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி இன்று (25.03.2025 - செவ்வாய்) மாலை 5 மணியளவில் சென்னை, இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றவுள்ளார்கள்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கவு ள்ளனர்.

எனவே இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் அனைத்து மாநில, மாவட்ட, மாநகர, நகர, பகுதி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகளும் மற்றும் அனைத்து ஜாமாத்தார்களும் திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று மாநில செயலாளர் சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முதலமைச்சர் பிறந்த நாள் விழா!

## மாநில அளவிலான மாபெரும் மாட்டு வண்டி ரேக்ளா ரேஸ் போட்டி

சென்னை, மார்ச் 25 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் மாட்டு வண்டி ரேக்ளா போட்டி நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 17வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் மாபெரும் ரேக்ளா போட்டி நடைபெற்றது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் இருந்து 80க்கும் மேற்பட்ட மாடுகளும், அறுபதுக்கு மேற்பட்ட மாட்டு வண்டிகளும் இப் போட்டிகளில் கலந்து கொண்டன.

நான்கு பிரிவுகளாக நடைபெற்ற இந்த போட்டிகளில், இரட்டை மாட்டு வண்டி, ஒற்றை மாட்டுவண்டியில் இரண்டு பல் மாடு, ஒரு பல் மாடு சிறிய மாடு என நான்கு வகைகளாக போட்டிகள் நடத்தப்பட்டன.

17 வது வட்டம் காந்திநகர் கண்ணம்பாளையம் முதல் சென்றம்பாக்கம், தீயம்பாக்கம், பெரியார் நகர், கொசப்பூர், ரவுண்டனா வரை சிறிய மாடுகளுக்கான போட்டியும், கண்ணம்பாளையம் காந்திநகர் சந்திப்பு முதல் சென்றம்பாக்கம், தீயம்பாக்கம், பெரியார் நகர், அரியலூர்,ஸ்பிங்க் கம்பெனி சந்திப்பு வரை இரட்டை மாடு களுக்கான போட்டியும் நடைபெற்றது.

முதல் நான்கு பரிசுகளை பெற்ற மாடுகளுக்கும் அதன் உரிமையாளர்களுக்கும், ரொக்க பரிசு மற்றும் சுழற் கோப்பைகள் வழங்கப்பட்டன.

முன்னதாக கண்ணம்பாளையம், ஆட்டோ ஸ்டாண்ட், காந்திநகர், சென்றம்பாக்கம், தீயம்பாக்கம், பெரியார் நகர்,அரியலூர் வரை நடைபெற்ற போட்டியில், நூற்றுக்கணக்கான, செங்குன்றம் காவல் நிலைய காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு சிறப்பாக போட்டியை நடத்திக் கொடுத்தனர்.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற போட்டியில், சி.பாலாஜி, சி.மூர்த்தி, எம். ஜான்சன், ஜி.பூபாலன், எஸ். விஜயன் (எ) ஜோசப் ஆகியோர் வரவேற்றனர்.

முதல் போட்டியை செங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளர் திரு புருஷோத்தமன் துவக்கி வைத்தார்.

இரண்டாவது போட்டியை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், மற்றும் சென்றம்பாக்கம் ஊராட்சி தலைவர் என். ராமு ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

மூன்றாவது போட்டியை வட்டச் செயலாளர்கள் கே. கருணாகரன், வி. ஆர். குப்பன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, கே.சண்முகப்பிரியன், எஸ்.உதயகுமார், மாவட்ட பிரதிநிதி பி.நிர்மல்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் மாத்தூர் பா. கோபிநாத், பகுதி மாணவரணி அமைப்பாளர் த. விக்னே ஸ்வரன் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்

நான்காவது போட்டியை பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ர. விஜய் ஆனந்த், மாதவரம் வினோத், ஏ. விஜயன், க. யுவராஜ்,கோ. ராஜேஷ் கண்ணன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ் , வி. சிவப்பிரகாஷ், ஆ. சாந்தகுமார் பகுதி மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.சுகாசினி, துணை அமைப்பாளர்கள் சரஸ்வதி, அத்திகுளம் தேவி, கஸ்தூரி, பெரியநாயகி, காவாங்கரை ஆர். ஜெயபாரதி, கலைச்செல்வி, ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

இறுதியாக மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பகுதி பிரதிநிதிகள் எஸ். முத்துவேல், வி. ஹரி, முத்துகிருஷ்ணன், வி.ஆர்.கே. ஜவகர், யாபேஸ், வடபெரும்பாக்கம் டாக்டர் எம். மைக்கேல், பி.செந்தில், இ.கார்த்திக், வக்கீல் எம்.என். தளபதி, டி.ஜெகன், மணலி புது நகர் சி.எம். ராஜா, யாசின் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சியின் துவக்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு காந்திநகர் கிளைக் கழக அலுவலகம் அருகே அமைக்கப்பட்டிருந்த கொடிக்கம்பத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கழக கொடி ஏற்றி வைத்தார்.

பின்னர் மாட்டுவண்டி போட்டியில் கலந்து கொண்ட மாடு வண்டியை ஓட்டிய வீரர்களுக்கும், பொதுமக்கள் கழகத்தினர் என சுமார் 500 பேருக்கு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் காலை உணவும் வழங்கப்பட்டது. சென்னையில் நடைபெற்ற போட்டி என்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் இந்த போட்டியை காவல்துறையினர் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்





மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு, பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், மாநில அளவிலான மாபெரும் மாட்டுவண்டி ரேக்ளா ரேஸ் போட்டி, 17 வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் நடைபெற்றது. நான்கு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் இரட்டை மாடுகள், ஒற்றை மாடுகள் என என்பதுக்கும் மேற்பட்ட மாடுகள், மற்றும் மாட்டு வண்டிகள் கலந்து கொண்டன. முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, நான்காம் பரிசு என வெற்றி பெற்ற அனைத்து வீரர்களுக்கும் ரொக்கமும், கோப்பைகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் கே .கருணாகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.